# முத்தமிழறிஞர் கலைஞர் 5ஆம் ஆண்டு நினைவு நாள் - மலரஞ்சலி!



கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.8.2023) சென்னை, காமராஜர் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.8.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு சென்னை, காமராஜர் சாலையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.8.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி, கோபாலபுரம் இல்லத்திற்குச் சென்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.8.2023), முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு, சென்னை, சி.ஐ.டி. நகர் இல்லத்திற்குச் சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.8.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி, அண்ணா அறிவாலயத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.8.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

### திருப்பத்தூர் மாவட்டத்தில்

## 30 நாட்களில் 1,546 பண்ணை குட்டைகள் அமைத்து உலக சாதனை!

திருப்பத்தூர், ஆக. 8-

திருப்பத்தூர் மாவட்டத்தில் 30 நாட்களில் 1,546 பண்ணைக்குட்டைகள் அமைத்து உலக சாதனை படைத்ததற்கு, உலக சாதனை படைப்பு அங்கீகார சான்றிதழ் வழங்கப்பட்டது.

திருப்பத்தூர் பண்ணைக்குட்டை அமைப்பு தமிழ்நாடு முழுவதும் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தும் வகையில் பண்ணைக் குட்டைகள் அமைக்கப் பட்டு வருகிறது. அதன்படி திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள 208 ஊராட்சிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் 1,373 பண்ணைகுட்டைகளும், ஊராட்சிமன்ற தலைவர்கள், தன்னார்வலர்கள் மூலம் 185 பண்ணை குட்டைகளும் என 1,558 பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணி கடந்த ஜூலை மாதம் 1ந் தேதி தொடங்கி 30ந் தேதி நிறைவடைந்தது.

இதில், 1,546 பண்ணைக் குட்டைகள் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. அதில், ஒரு பண்ணைக் குட்டை அமைக்க 670 மனித உழைப்பு பயன்படுத்தப் பட்டது. பண்ணைக்குட்டைகள் உலக சாதனை விதிப்படி, ஆழம் 5 அடியும், அகலம் 30 அடியும், நீளம் 60 அடியும் இருக்க வேண்டும்.

ஆனால் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 1,558 பண்ணைக்குட்டைகளின் ஆழம் 6 அடியும், அகலம் 36 அடியும், நீளம் 72 அடியும் ஆகும். இதன் மூம் ஒரு பண்ணைக்குட்டையில் ஒவ்வொரு மழை தருணத்திலும் 4,35,600 லிட்டர் மழைநீரும், ஒட்டுமொத்தமாக 67.87 கோடி லிட்டர் மழை நீரை சேமிக்கலாம். இது மண்ணிற்கும், விவசாயத்திற்கும், வருங்கால சந்ததிகளுக்கும் பயனளிக்ககூடிய திட்டம் ஆகும். இதன் மூலம் 30 நாட்களில் பல்வேறு இடங்களில் அதிகமான பண்ணைக்குட்டைகளை உருவாக்கி உலக சாதனை எனும் வரலாற்று பதிவை ஏற்படுத்தி உள்ளது. திருப்பத்தூர் மாவட்டத்தில் பண்ணைக் குட்டை அமைத்ததில் உலக சாதனை படைத்ததற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது.

கலெக்டர் பாஸ்கர பாண்டியன் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் வளர்மதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் செல்வராசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். உலக சாதனை பதிவு செய்யும் தமிழன் புக் ஆப் ரெக்கார்ட்ஸ், எலைட் வேர்ல்டு ரெக்கார்ட், ஏசியன் ரெக்கார்ட்ஸ் அகாடமி, இந்தியா ரெக்கார்ட்ஸ் அகாடமி ஆகியவை தேர்வு செய்யும் பணியை ஏற்றிருந்தது. அதன் நிர்வாகிகள் கலெக்டர் பாஸ்கர பாண்டியனிடம் சான்றிதழ் மற்றும் மெடல் வழங்கிப் பாராட்டினர்.

நிகழ்ச்சியில் அனைத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் தங்கம் தென்னரசு சிறப்புரை!

## நெல்லை கிழக்கு - மத்திய மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

### இரா.ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்பு!

நெல்லை.ஆக.8-

நெல்லை கிழக்கு, மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் செயற்குழு கூட்டம் வண்ணார் பேட்டை அப்னா பார்க் கூட்டரங்கில் நெல்லை ஒருங்கிணைந்த மாவட்ட அவை தலைவர்கள் கிரகாம் பெல்,வி.கே. முருகன் ஆகியோர் தலைமையில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞான திரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், மாநகராட்சி மேயர் சரவணன்,துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தீர்மானங்களை வாசித்தார். நிகழ்வில் நிதி, மனிதவள மேலாண்மை துறை மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு,நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை யாற்றினர்.

பின்னர் நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது.

உயிர் துடிப்புடனும், உயிரோட்டமாகவும் கழகம் இயங்கும் ஒரு மாவட்டம் நெல்லை மாவட்டமாகும்.ஏற்கனவே நெல்லை மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சராக இருந்து மாற்றப்பட்டு தற்போது மீண்டும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளேன். எப்போதும் நெல்லை மீது எனக்கு ஈர்ப்பு உண்டு, அதனால் தான் கீழடி போன்று பொருநை நாகரீகத்தை உலகறிய செய்யும் வகையில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியத்தை நெல்லையில் அமைக்கிறோம்.இந்த பணி முடிந்து முதலமைச்சர் கையால் திறந்து வைக்க வேண்டும் என்பதற்காக நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட போது முதலமைச்சரிடம் தொல்லியல் துறை என்னிடமே இருக்கட்டும் என்று கேட்டு பெற்றுள்ளேன்.

பாண்டிச்சேரி சேர்த்து 40 பாராளுமன்றத் தொகுதிகள் உள்ளன. கடந்த முறை 40க்கு 40 என்பதில் ஒரு தொகுதியை இழந்துவிட்டோம் தற்போது வரும் பாராளுமன்ற தேர்தலில் 40க்கு 40 தொகுதியையும் பெற வேண்டும் என்ற லட்சியத்தோடு பணியாற்ற வேண்டும். அதிலும் குறிப்பாக நெல்லை பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் மாநிலத்திலேயே அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார் என்ற பெருமையை பெற்று தர வேண்டும்.அரசியல் அரங்கில் அனைவராலும் உன்னிப்பாக கவனிக்க கூடிய தொகுதி, நெல்லை தொகுதி ஆகும். நெல்லை மக்களின் எண்ணம் எப்படி பிரதிபலிக்கிறது, உணர்வு எப்படி இருக்கிறது. என்பதுதான் தென் மாவட்டங்களில் 15 தொகுதிகளில் எதிரொலிக்கும்.40 தொகுதிகளிலும் வெற்றி பெறுவது தான் குறிக்கோள்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார்.